**JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU**
**CC No.19 /2026**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : Lw1/ Pw1 |
| Name | : Suresh kumar |
| Father/Husband's Name | : Jayaraman |
| Village | : |
| Taluk | : |
| Calling | : |
| Age | : 50 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 13.03.2026.

**Accused present.**

**முதல் விசாரணை:**

நான் தற்போது செங்கலபட்டு தாலுக்கா காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணியாற்றி வருகிறேன். கடந்த 27.10.2023 ம் தேதி காலை 11.00 மணியளவில் நான் செங்கல்பட்டு மதுவிலக்கு அமலாக்க பிரிவில் பணியிலிருந்தபோது, ரோந்து பணியாக நானும், உதவி ஆய்வாளர் செல்வம், தங்கராஜ் காவலர் ஆகியோர்களுடன் ரோந்து பணியாக மதுவிலக்கு மற்றும் கஞ்சா வேட்டையாக திம்மாவரம், ஆத்தூர், வில்லிவாக்கம் அருகே கண்காணிக்க சென்ற போது, மேற்சொன்ன உதவி ஆய்வாளர் அவர்களுக்கு ரகசிய தகவல் கிடைத்ததின் பேரில், காலை 11.30 மணியளவில் சோதனைக்கான உபகரணங்களை எடுத்து கொண்டு, வேதநாராயணபுரம், பிடி நகர், 8வது தெரு அருகே கண்காணித்த போது, ஒரு ஆண் நபர் சந்தேகத்திற்கு இடமாக நின்று கொண்டிருந்தவரை என்னை பார்த்தவுடன் ஓட முயற்சித்தவரை நாங்கள் மடக்கி பிடித்து விசாரித்த போது, முன்னுக்கு பின் முரணாக கூறியவரை பின்னர் தன் பெயர் தீனா த.பெ.மதனகோபால் என்றும், வேதநாராயணபுரத்தை சேர்ந்தவர் என்று கூறியவரை தற்போது நீதிமன்ற ஆஜரில் இருக்கும் எதிரியை பிடித்து விசாரணை செய்தோம். பின்னர், மேற்படி, ஆஜர் எதிரியிடம் உதவி ஆய்வாளர் உங்களை சோதனை செய்வதற்கு சாட்சிகளாக குற்றவியல் நீதித்துறை நடுவர் அல்லது அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர் முன் சோதனை செய்வதற்கு தேவையா என்று கேட்டபோது, அதற்கு எவ்வித ஆட்சேபணையும் தெரிவிக்காமல் நீங்களே

சோதனை செய்யும்படி அனுமதி கொடுத்ததின் பேரில், உதவி ஆய்வாளர் எதிரி தீனா என்பவரை சோதனை செய்த போது, ஒரு பாலீத்தீன் பையிலிருந்து ஆஜர் எதிரி கொடுத்த வைத்திருந்த கஞ்சாவை எடைபோட்டு பார்த்த போது 5 கிராம் அளவு கொண்ட 20 பாக்கெட் வீதம் மொத்தமாக 100 கிராம் கஞ்சாவை பச்சை நிறத்தில் ஒருவித நெடியுடன் கூடிய துர்வாசத்தில் இருந்ததை குறித்து கேட்டபோது, அரசால் தடை செய்யப்பட்ட கஞ்சாவை விற்பதற்காக வைத்திருப்பதாக சொன்னார். அப்போது உதவி ஆய்வாளர் உரிய காரணம் கூறி, ஆஜர் எதிரியை கைது செய்தபோது, எதிரி தான் வைத்திருந்த 100 கிராம் கஞ்சாவை உதவி ஆய்வாளர் அவர்களிடம் எடுத்து கொடுக்க, அதை கைப்பற்றுதல் மகசர் தயார் செய்து கைப்பற்றினார். அதற்கு நானும், காவலர் தங்கராஜ் என்பவரும் சாட்சிகளாக இருந்து கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையது தான். எனது கையெழுத்துடன் கூடிய கைப்பற்றுதல் மகசர் **அதசா.ஆ1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர், எதிரி மற்றும் வழக்கு சொத்துகளுடன் நிலையம் சேர்ந்து, எதிரியின் மீது NDPS சட்டத்தின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். வழக்கு சம்பந்தமாக உதவி ஆய்வாளர் விசாரணை செய்தார்.

**குறுக்கு விசாரணை:**

நாங்கள் எங்களுக்கு சொந்தமான இருசக்கர வாகனத்தில் ரோந்து பணிக்கு சென்றோம். காவல் உதவி ஆய்வாளர் அவருடைய இருசக்கர வாகனத்தில் வந்தார். ரகசிய தகவல் கிடைத்தபோது, காவல்நிலையத்திலிருந்து 8 கி.மீ தொலைவில் இருந்தோம். சம்பவ இடம் காவல்நிலையத்திலிருந்து 7 கி.மீ தொலைவில் இருக்கிறது. ரகசிய தகவல் கிடைத்த இடத்திலிருந்து சம்பவ இடம் 7 கி.மீ தொலைவில் இருக்கிறது. சம்பவ இடத்திற்கு 20 நிமிடத்தில் சென்றுவீட்டோம். சம்பவ இடத்திற்கு 12.30 மணியளவில் சென்றுவிட்டோம். 12.30 மணிக்கு திம்மாவரத்திலிருந்து கிளம்பினோம். 12.50 மணிக்கு சம்பவ இடம் சென்றுவிட்டோம். நான் எத்தனை மணிக்கு சம்பவ இடம் சென்றேன் என்றால் ஞாபகமில்லை. சம்பவ இடத்தில் சுமார் அரை மணி நேரம் இருந்தோம். சம்பவ இடத்திலிருந்து 1.30 மணியளவில் கிளம்பினோம். 2 மணிக்கு காவல்நிலையம் சென்றோம். நான் தட்டச்சு செய்த ஆவணத்தில் சம்பவ இடத்தில் வைத்து கையெழுத்து போட்டேன். எதிரியை விசாரித்து, ஆவணத்தை தயார் செய்து வந்தோம். அதை பற்றி காவல் உதவி ஆய்வாளருக்கு தான் தெரியும். யார் சென்று ஆவணத்தை தயார் செய்து வந்தார்கள் என்று எனக்கு தெரியாது. அந்த நபர் அரை மணி நேரம் கழித்து ஆவணம் தயார் செய்து வந்தார். நான் ஆவணத்தை படித்து பார்த்து உதவி ஆய்வாளர்

சொன்னதின் பேரில் கையெழுத்து போட்டேன். சம்பவ இடம் பொது மக்கள் நடமாட்டம் இருக்கும் இடம் என்றால் அது குடியிருப்பு பகுதி தான். அங்கு மக்கள் இல்லை. எத்தனை மணிக்கு காவல் உதவி ஆய்வாளர் விசாரித்தார் என்றால் அன்றைய தினமே 2 மணியளவில் விசாரித்தார். நான் சொல்ல சொல்ல தட்டச்சு செய்தார். போலீசார் விசாரணையில் பச்சை நிற பொட்டலம் கைப்பற்றப்பட்டதாக சொல்லி இருக்கிறேன். சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில் நான் ரோந்து பணிக்கு செல்லவில்லை என்றாலும், வழக்கிற்கு தேவையான அனைத்து ஆவணங்களும் காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றாலும், நான் காவல்நிலையத்தில் வைத்து தான் கையெழுத்து போட்டேன் என்றாலும், என் முன்னிலையில் எந்த பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றாலும்,  உயர் அதிகாரியின் உத்தரவின் பேரில் தவறான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமுமில்லை என்றாலும் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

sd/- S. Sahaana
Judicial Magistrate No.II,
Chengalpattu.